**Dated : 07.08.2025**

**O.S.No. 54/2017**

**DW.1 – திரு. சுரேஷ்குமார்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் பட்டா யார் பெயரில் காணப்படுகிறது என்றால் என் தகப்பனார் வேடியப்பன் பெயரில் காணப்படுகிறது. அந்த பட்டாவிற்குண்டான நிலம் உங்களுடையதா என்றால் எங்களுடையது தான். என்னிடம் தற்போது காட்டப்படும் பத்திரம் என்ன பத்திரம் என்றால் கிரய ஒப்பந்தம் பத்திரம் என்று காணப்படுகிறது. சாட்சி தாமே கூறுகிறார் அடமான பத்திரம் என்று தான் என்னிடம் சொன்னார்கள். என் பெயர் என்ன என்றால் சுரேஷ்குமார். என்னுடைய பெயர் இந்த பத்திரத்தில் காணப்படுகிறதா என்றால் காணப்படுகிறது. என் குடும்ப நபர்களுடைய பெயர் எல்லாம் இந்த ஆவணத்தில் காணப்படுகிறதா என்றால் காணப்படுகிறது. இந்த பத்திரத்தில் S.R. வேடியப்பன் என்று கையொப்பமிட்டிருப்பது என்னுடைய தகப்பனார் என்றால் சரிதான். என் தகப்பனாருடைய பெயர் என்று இந்த பத்திரத்தில் 2வது வரியில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். S.R. வேடியப்பன் என்று கையொப்பமிட்டிருப்பது அடமான பத்திரம் என்று தான் கையொப்பமிட்டுள்ளார்.

வேடியப்பன், செந்தில்குமார், சசிகுமார், சுரேஷ்குமார் ஷியாமலா ஆகிய ஐந்து நபர்களும் எங்கள் குடும்பத்தினர் தான் என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேனா என்றால் ஒப்புக்கொள்கின்றேன். மேற்சொன்ன கையொப்பங்கள் என் குடும்ப உறுப்பினர்களுடையது தான் என ஒப்புக்கொள்கின்றேனா என்றால் ஒப்புக்கொள்கின்றேன். நானும், என் குடும்ப உறுப்பினர்களும் ஆவணத்தை படித்து தானே கையொப்பமிட்டோம் என்றால் நாங்கள் படித்து பார்க்கவில்லை. நாங்கள் 5 பேரும் ஆவணத்தை முழுவதுமாக படித்து பார்த்து தான் கையொப்பமிட்டோம் என்றால் சரியல்ல. நான் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்காகவும், எனக்காவும் சேர்த்து தான் சாட்சியம்

அளிக்கின்றேன். இந்த வழக்கிற்கான பதிலுரையை யார் அளித்தது என்றால் நான் தான் அளித்தேன். இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்துள்ளார், அந்த பதிலுரையை 1, 3, 4, 5 பிரதிவாதிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றால் சரிதான்.

தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கிரய ஒப்பந்த பத்திரத்தில் பத்தி 4–ல் 2, 3, 4, 5, 6 ஆகிய நபர்களின் குடும்ப செலவிற்காகவும், சில்லறை கடன் தீர்க்கும் பொருட்டும், இச்சொத்தினை 1ம் இலக்கமிட்டவருக்கு இன்று தினம் கீழ்காணும் சாட்சிகள் முன்பாக ரூ.21,20,250/–க்கு விலை பேசி நிச்சயிக்கப்பட்டது, இதற்காக 1ம் இலக்கமிட்டவரால் 2, 3, 4, 5, 6 இலக்கமிட்டவர்களுக்கு முன்பணமாக ரூ.17,00,000/– ரொக்கம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, அடமான பத்திரமாக ரூ.5,00,000/– மட்டுமே பெற்றுக்கொண்டோம். சாட்சி தாமே கூறுகிறார் அதனை கடனாக தான் பெற்றோம். என்னுடைய பதிலுரையில் பத்தி 4–ல் ரூ.5,00,000/–க்கு ரூ.2/– வட்டி வீதம் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, பிரதிவாதிகள் கடன் வாங்கினார்கள் என்று சொன்னால் கடன் தான் வாங்கினோம், வாங்கிய கடனை 05.08.2015 தேதியன்று வட்டியுடன் திருப்பி கொடுத்துவிட்டோம்.

ஊர் வழக்கப்படி கடன் நடவடிக்கைக்காக, கிரய உடன்படிக்கை, காசோலை, புரோநோட்டுக்கள் எழுதிக்கொடுப்பது வாடிக்கை, அதன் படி தான் பிரதிவாதிகள் தாவா சொத்தை கடன் நடவடிக்கைக்காக எழுதி கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. தற்போது சொத்தினுடைய மதிப்பு அதிகமாகிவிட்ட காரணத்தினால் கடன் தான் வாங்கினோம் என்று பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. கடந்த 2014 மார்ச் மாத வாக்கில் பிரதிவாதிகளுக்கு ரூ.5,00,000/– பணம் அவசர தேவைப்பட்டதால் நில புரோக்கர் ராஜா மூலமாக வாதியை இந்த 2ம் பிரதிவாதிக்கு தெரிந்தவர் என்ற முறையில் ரூ.5,00,000/–க்கு மாதம் ரூ.2/– வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு ரூ.5,00,000/– கடனாக பிரதிவாதிகள் வாங்கினார்கள், அதற்கு வாதி கூறிய

நிபந்தனைகளை வேறு வழியில்லாமல் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டார்கள் என்றால் நாங்கள் வெற்று பாண்டு பேப்பரிலும், மேலும் செந்தில்குமார், சசிகுமார், சுரேஷ்குமார் ஆகியோர் கையொப்பமிட்டுக்கொடுத்தோம், அதை பாலக்கோடு நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளார்கள்.

வா.சா.ஆ.2ல் உள்ள விவரங்களை படித்து பார்த்து தானே கையொப்பமிட்டீர்கள் என்றால் படித்து பார்க்காமலேயே கையொப்பமிட்டோம். பணத்தை திருப்பி கொடுத்துவிட்டதாக சொல்கிறேன், அதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதாரம் தாக்கல் செய்திருக்கிறோம்.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.**

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.